# 14

# வேலை செய்தல்



# WORK

14

## எப்படி வேலை செய்யக்கூடாது?

HOW NOT TO WORK

**1**

மார்க்கம் சார்ந்தது, சாராதது என வேறுபடுத்தக்கூடாது.

**2**

சராசரியாய்ச் செய்வதில் திருப்தியடையக்கூடாது.

**3**

திட்டமிடுதலின் அவசியத்தை அலட்சியப்படுத்தக்கூடாது.

**4**

நேரத்தை வீணடிக்கக்கூடாது.

**5**

கடின உழைப்பிற்கு இறையருளைப் பதிலாக்கக்கூடாது.

**6**

பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தயங்கக்கூடாது.

**7**

சேவை மனப்பான்மையை இழந்துவிடக்கூடாது.

**8**

உடலைக் கவனியாது விடக்கூடாது.

**9**

சிறிய காரியங்கள்தானே என்று அசட்டையாயிருக்கக்கூடாது.

**10**

வேலையில் உற்சாகம் இழக்கவே கூடாது.

# 14 எப்படி வேலை செய்யக்கூடாது?

## அறிமுகவுரை

- வேலை என்பது கடவுள் தந்த ஆசீர்வாதம்—
  வீழ்ச்சிக்கு முன்னரே மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது (ஆதி 2:15).
  மனிதனின் வீழ்ச்சி ஆதியாகமம் 3இல்தான் வருகிறது.
  வீழ்ச்சிக்குப் பின்னரும் கடவுள் ''வேலையைச்'' சபிக்கவில்லை;
  ''நிலத்தைத்தான்'' சபித்தார் (ஆதி 3:17ஆ)

- சபைகளிலும் ஐக்கியங்களிலும் ஆன்மீகச் செயல்பாடுகள் குறித்து எவ்வளவோ பேசுகிறோம்;
  நமது வேலைகள், வேலைத்தலங்கள் குறித்தோ பேசுவது அபூர்வம்.

  > மண்ணுலகிற்கு உதவாத அளவு விண்ணுலகச் சிந்தையா?
  > Too heavenly-minded to be of any earthly use?

  ஜான் வெஸ்லியிடம் கேட்கப்பட்டதொரு கேள்வி:

  > ''நாளை காலை இயேசு வருவாரானால் என்ன செய்வீர்கள்?''

  வெஸ்லியின் பதில் :

  > ''என் புல் தரையைச் செதுக்கி முடிப்பேன்!''

- வேலை செய்யும் நம்மில் பலர் செய்யவேண்டிய அளவு செய்வதில்லை.

  நாளின் முடிவில் இது நம்மை இளக்கரிக்கச் செய்கிறது.

  காரணம்: சரியான முறையில் வேலை செய்யக் கற்றுக்கொள்ளவில்லை.

  நமக்குக் கொடுக்கப்பட்ட எந்த வேலையையும் தவறான முறையில் செய்வதைத் தவிர்க்கவும், தவறாய்க் கற்றவற்றைக் களையவும் உதவவே இப்பாடங்கள்.

- ''வேலைக்கும்'' ஆரோக்கிய உபதேசத்திற்கும் என்ன சம்பந்தம்?

  நாம் உபதேசத்தை உபதேசத்திற்காய்ப் படிப்பதில்லை —

(உ-ம்) வேலைக்காரருக்குப் பவுலின் அறிவுரை :

தீத்து 2:9,10 ... *தேவனது உபதேசத்தை அலங்கரிக்க*

- ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவராயிருப்பது எளிது;
  வார நாட்களில் கிறிஸ்தவராயிருப்பதோ ஒரு சவால்!
  திங்கள்கிழமை கிறிஸ்தவராயிருங்கள்!

  சபைக்கல்ல, ''உலகிற்கே வெளிச்சமாயிருக்க''
  அழைக்கப்பட்டிருக்கிறோம்! (மத் 5:14)

  வேலைத்தலத்தில் நமது சாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டும்.

- E.E. Dugmore (1843-1925) என்பவரின் போற்றல் பாடல்:

  *சர்வ வல்ல தந்தையே;*
  *வேலைக்காரர் கரத்திற்குப் பலம் அருளுவது நீரே;*
  *இசைக் கலைஞனின் கலை வருவது உம்மிடமிருந்தே;*
  *கவிஞனின் எழுதுகோல், ஓவியனின் விரல்கள்,*
  *எல்லாம் மேம்படுவது உம்மாலே;*
  *கடலையும் நிலத்தையும் அவ்வளவாய்ச் சித்தரிக்கின்றனரே!*

## எப்படி வேலை செய்யக்கூடாது?

### 1. மார்க்கம் சார்ந்தது, சாராதது என வேறுபடுத்தக்கூடாது.

Do not overdifferentiate between secular & sacred.

■ பைபிளின் முதல் வார்த்தைகள் —

*"ஆதியிலே தேவன் ..."* (ஆதி 1:1)

இங்கு கடவுளை வேலை செய்கிறவராகவே சந்திக்கிறோம்.

அவரது படைப்பின் வேலை (ஆதி 1) —

நாள் 1 — (வச 3-5) ... *ஒளியும் இருளும்* ... இயற்பியல்

2 — (வச 6-8) ... *கீழும் மேலும் தண்ணீர்* ... நீரியல்

3 — (வச 9,10) ... *நிலமும் கடலும்* ... புவியியல்

(வச 11-13) ... *புல், பூண்டுகள்* ... வேளாண்மை

4 — (வச 14-19)...*விண்மீன்கள், சூரியன், சந்திரன்* ... வானியல்

5 — (வச 20-23) ... *மீன்கள், பறவைகள்* ... உயிரியல்

6 — (வச 24,25) ... *மிருகங்கள்* ... விலங்கியல்

(வச 26-28) ... *மனுஷன், மனுஷி* ... மானிடவியல்

(வச 29-31) ... *உணவு: பூண்டு, கனி* ... உணவியல்

7 — ( 2:2) ... *"வேலையிலிருந்து" ஓய்வு*

ஆதியாகமத்தில்,

படைப்பு எனும் **வேலையில்** கடவுள் தீவிரமாயிருக்கிறார்.

ஆதியாகமத்திற்குப்பின்,

புதுப் படைப்பு எனும் **வேலையில்** அவர் தீவிரமாயிருக்கிறார்.

"மார்க்கம் சார்ந்தது" (sacred), "சாராதது" (secular) என வெகுவாய் வேறுபடுத்தியவர்களை இதனால்தான் இயேசு கடிந்துகொண்டார்—

யோ 5:16 ... 38 வயது திமிர்வாதக்காரனுக்கு

உடற்கூறியல் அற்புதம் (orthopaedic)

:17 ... *என் பிதா* ***செயலாற்றிவருகிறார் ;***

*நானும்* ***செயலாற்றிவருகிறேன்.***

- இயேசு 18 ஆண்டுகள் தச்சுத்தொழில் செய்தார் (12 முதல் 30);
  3 ஆண்டுகள்தான் அற்புத ஊழியம் (30 முதல் 33).

  முதல் அற்புதம் அல்லது முதல் பிரசங்கம் செய்யுமுன்னரே
  தந்தையாம் கடவுளிடமிருந்து நற்சான்று பெற்றுவிட்டார்!
  மத் 3:17 ... *எனது நேச குமாரன் ... இவரில் பிரியம் ...*

- பழைய ஏற்பாட்டிலும் புதியதிலும்
  இதற்கு ஏராளம் எடுத்துக்காட்டுகளுண்டு —

**அ) பழைய ஏற்பாடு**

ஆன்மீகச் சத்தியங்களைப் போதிக்கும்போது கீழ்க்கண்ட நபர்களை அடிக்கடி சுட்டிக்காட்டுகிறோம் —

- ☐ யோசேப்பு ... வேளாண் மற்றும் உணவு வினியோகத் துறைச் செயலர் (ஆதி 41:40,48,49)
- ☐ நெகேமியா ... மன்னனுக்கு நேர்முக உதவியாளன் (நெகே 1:11இ)
- ☐ தானியேல் ... பாபிலோனில் ஆளுநர் (தானி 2:48)
- ☐ செருபாபேல் ... கட்டிடச் சிற்பி (சக 4:9,10ஆ)
  பதவி ... *''யூதாவின் கவர்னர்''* (ஆகாய் 1:1)
  அவனுக்கு ... *''பலத்தினால் அல்ல ... என் ஆவியினால்''* (சக 4:6).
  கட்டும்போது தீர்க்கர்களின் உதவிபெற்றான் (எஸ்றா 5:1,2; 6:14)
- ☐ பெசலெயேல் : பிரசங்கிக்க அல்ல,
  கைவினைத் திறனுக்காய் அபிஷேகம் (யாத் 35:30-33)
- ☐ *''கர்த்தருக்குப் பரிசுத்தம்''* *சக* 14:20,21
  *''பலிபீடப் பாத்திரங்களில்''* மட்டுமல்ல — ஆராதனை (worship)
  *''குதிரைகளின் மணிகளிலும்''* — யுத்தம் (warfare)
  *''சமையல் பானைகளிலும்''* — வேலை (work)
- ☐ தானியங்களை இடிக்கவும்/அரைக்கவும்கூட தேவ ஞானம் —
  ஏசா 28:27-29 .... *சீரகம் .... கோதுமை ...*

☐ நீதிமொழிகள் 31:10-31இலுள்ள குணசாலியான பெண் —
இந்த 21 வசனங்களில் 12 வசனங்கள் **''வேலையைப்''** பற்றியது!
கடைசி வசனம் (வச 31) — *''அவளது **வேலைகள்** ... புகழட்டும்! ''*

## ஆ) புதிய ஏற்பாடு

☐ பவுல் தனது கூடாரத் தொழிலைத் தொடர்ந்தான் —
ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவுடன் — *''அதே தொழில் செய்தவர்''*
அப் 18:1-3 ... *''தங்கி ... **வேலை** செய்து வந்தான்''*

இது அவனது ''முதல்'' மிஷனரிப் பயணத்தின்போதுமட்டுமல்ல,
இரண்டாம் பயணத்தின்போதும்.

■ புதிய ஏற்பாட்டு உபதேசம்:

1 கொரி 10:31 *உண்டாலும், குடித்தாலும், எது செய்தாலும்*
*... எல்லாம் ... ''தேவ மகிமைக்காய்''*

கிறிஸ்தவன் செய்யும் **எதுவும்** கடவுளுக்கு ''ஊழியம்தான்''
கொலோ 3:23,24 ... *எதைச் செய்தாலும் ...*
*கர்த்தரைச் சேவிப்பதால் ...*

■ இப்பொருள் பற்றிய இயேசுவின் கூற்று :

லூக் 17:34-36 ... *''இரு மனிதர்''* ... படுக்கை ... தூக்கம்
*''இரு பெண்கள்''* ... சமையலறை... மாவரைத்தல்
*''இரு உழவர்''* ... வயல் ... பண்ணை வேலை

ஆண்டவரது வருகையின்போது எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஜெபக் கூட்டத்திலோ, ஆலய ஆராதனையிலோ இருக்கவேண்டிய அவசியமில்லை!

## 2. சராசரியாய்ச் செய்வதில் திருப்தியடையக்கூடாது.

Do not be satisfied with average performance.

■ ''நேர்த்தி'' என்பதே நம்மைக் குறித்த தேவ சித்தம் —
தமது மக்கள் தங்கள் வேலையில் சிறந்திலங்கவே
அவர் விரும்புகிறார் —

நீதி 22:29 .... *அலுவலில் கவனம் ... அரசு அவை .....*

குறைபாடு அல்லது தரக்குறைவு எதுவாயினும்,
நமது பழக்கத்திலுள்ள சொல் —

That's ok!

தமிழ் : பரவாயில்லை!
தெலுங்கு : பரவாலேது!
இந்தி : பரவா நஹி!

பல இந்திய மொழிகளுக்கு ஏறத்தாழ ஒரே வார்த்தை!

■ நேர்த்திக்கு உயரிய எடுத்துக்காட்டு தேவனே —

ஆதி 1:4,10,12,18,21,25 ... *தேவன் ''கண்டார்''* (மீள்பார்வை)
:31 ... *''எல்லாம் ... மிகவும் நன்றாயிருந்தது''*

திருப்திகரமாய், நன்றாய், இல்லாவிடில் அதை மேம்படுத்தினார் —
உ-ம்) ஆதி 2:18 ... *மனிதன் தனியாயிருப்பது நல்லதல்ல ...*

□ *கடவுள் எல்லாவற்றையும் ... நேர்த்தியாய்ச் செய்கிறார் —*
பிர 3:10 .. கடவுள் தந்த வேலை
:11 ... கடவுளது வேலை

□ இயேசு இதைத்தான் தமது வாழ்வில் காட்டினார் —
மாற் 7:37 ... *''எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்''*
(உ-ம்) *செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் —*
ஒன்றுக்கொன்று தொடர்புடைய குறைபாடுகள்!

அடுத்த அத்தியாயத்திலேயே,
ஒரு குருடனிடம் *"ஏதாவது தெரிகிறதா?"* என்று கேட்டார்

(மாற் 8:23-25)

எதையும் அவர் அரைகுறையாய் விடுவதில்லை!

ஆம், கடவுள் தொடங்குவதைப் பூரணமாய் முடிக்கிறார்!

பிலி 1:5 ... *நற்செயலைத் தொடங்கினவர் ... முற்றுமுடிய ...*

■ நாம் வேலையில் உயர்தரம் எட்டுவது எப்படி?

**வழிமுறைகள்:**

அ) கவனமாயிருப்பதால் ...

நீதி 22:29 ... *"வேலையில் கவனம்"*

— அரைமனதாய் அல்ல

☐ மன்னன் எசேக்கியா

2 நாளா 31:21 ... *"முழு இதயத்தோடும் ... சித்திபெற்றான்"*

☐ வேலையில் கவனமாயிருப்பதைச் சாலொமோன் பாராட்டினான்—

1 இரா 7:13,14 ... ஈராம் (வெண்கல ஆசாரி)

11:28 ... யெரொபெயாம் (அதிகாரி)

சாலொமோனின் புத்திமதி :

பிர 9:10 ... *செய்ய நேரிடுவது ... முழு பலத்தோடு செய்*

ஆ) கற்பதால், பயிற்சியெடுப்பதால்...

வரமிருந்தால் மட்டும் போதாது —

பிர 10:10 ... *கோடரி ... மழுங்கல் ... அதிகப் பலம்*

திறமைகளைக் கூராக்குதல்

☐ இவை போன்ற நூல்களை வாசியுங்கள் —

*"இன்னும் நேர்த்தியாய்ப் பேசுவது எப்படி?"*

*"இன்னும் நேர்த்தியாய் எழுதுவது எப்படி?"*

☐ கருத்தரங்குகள், பயிற்சியரங்குகளில் பங்குபெறுங்கள் —

பெண்கள்: சமையல் வகுப்புகள்

சமையற்கலை நூல்கள்

தேக்கநிலையடையாதீர்: ‘‘இப்படித்தான் செய்துவருகிறோம்’’
என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

☐ மாணவர்: அறிவு vs. முயற்சி (Intelligence vs. Industriousness)

☐ மூத்தவர்களிடமிருந்து துணுக்குகளைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இ) ஆரோக்கியமான போட்டிகளினால் ...

☐ உங்களை உங்களுக்கே ஒப்பிடாதீர்!
2 கொரி 10:12 ... *தங்களுக்கே தங்களை ஒப்பிட்டு...ஞானமல்ல*

☐ பிறரைவிட மேன்மையாய்ச் செய்திட முயலுவீர்!
(உ-ம்) லூக் 1:1-4 ... *திட்டமாய் விசாரித்தறிந்து ....*
*கிரமமாய் எழுதுவது ...*

ஈ) திரும்பச் சரிபார்ப்பதால் ...

☐ *தேவன் ‘‘கண்டார்’’ ... நல்லது ... நல்லதல்ல* (ஆதி 1:10,12; 2:18)

☐ ஏதாவது தெரிகிறதாவென்று குருடனிடம் ஆண்டவர் *‘‘கேட்டார்’’*
(மாற் 8:23)

☐ மதிப்பெண் கூட்ட மாணவர் மறுபடி பரீட்சை எழுதுகின்றனர்.

☐ நல்ல கட்டுரை எதுவும் ‘‘எழுதப்பட்டதல்ல,’’
‘‘திரும்ப எழுதப்பட்டது!’’
எப்பொழுதுமே FF (Fast Forward) அல்ல,
REW (Rewind)உம் அவசியம்!

■ வணிகவுலகின் கோஷங்களால் உந்தப்படுங்கள் —
‘‘நேர்த்தியிலும் நேர்த்தி!’’ (The best of the best!)
‘‘நேர்த்தியையும் மிஞ்சியது!’’ (Better than the best!)
‘‘வானமா எல்லை?’’ (The sky is not the limit!)

விளையாட்டு வீரரிடமிருந்த ஊக்கம் பெறுங்கள் —
1 கொரி 9:24,25 ... *‘‘அவர்கள் ... நாமோ ...’’*

■ வேலையில் நேர்த்தியாயிருந்தால்
அது ஆன்மீகக் காரியங்களையும் மேம்படுத்தும் —
(உ-ம்) கூடாரத்திற்குச் சரியாய்த் தோல் வெட்டுதல்
vs. சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்தல்!
2 தீமோ 2:15 ... *‘‘வெட்கப்படாத ஊழியன்’’*

## 3. திட்டமிடுதலின் அவசியத்தை அலட்சியப்படுத்தக்கூடாது.

Do not downplay the importance of planning.

■ நாம் ஏற்கனவே பார்த்துள்ள ஒரு வசனம் —

பிர 10:10 ... *கோடரி ... மழுங்கினால் ... அதிகப் பலம் ...*

... *ஆனால் ஞானம் வெற்றி கொண்டுவரும்*

அதாவது, எதையும் செய்யுமுன்பும்

செய்யும்போதும் யோசியுங்கள்.

நபருக்கு நபர் அறிவாற்றல் வேறுபட்டிருந்தாலும்,
எதையும் ''செய்யுமுன்'' ''யோசிப்பது'' இரு நன்மைகள் பயக்கும் —

அ) அதை மேம்படச் செய்ய நமக்கு உதவும்.

ஆ) பெருந்தவறுகள் செய்யாது நம்மைக் காக்கும்.

திட்டமிடச் செலவழிக்கும் நேரம் வேலையின்போது மிச்சமாகும்!

(உ-ம்) லூக் 14:28-30 ... கட்டிடம் (Building)

... *முன்பு அவன் உட்கார்ந்து ...*

:31,32 ... யுத்தம் (Battle)

இரண்டுமே பொது அறிவுதானே?

நீதிமொழிகளிலும் பிரசங்கியிலும் நெடுகவே ''நடைமுறை ஞானம்'' என விளக்கப்பட்டிருப்பது இதுதான்—

நீதி 4:7 ... *ஞானமே முக்கியம்*

... *எதைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதி ...*

■ ஞானமும் புத்தியும் பெறுவது எப்படி?

### அ) ஜெபத்தின் மூலம் ...

யாக் 1:5 ... *ஞானத்தில் குறைவுள்ளவன் ... கேட்கட்டும் ...*

சொப்பனத்திலும் சாலொமோன் வேண்டினான் (1 இரா 3:5,10)

உங்கள் வேலைகளிலெல்லாம் தேவ ஞானத்திற்காய் வேண்டுங்கள் —

நீதி 16:3 ... *ஒப்புவி ... செயல்கள் ... யோசனைகள் ...*

வேலைத்தலத்தில் இறைப்பிரசன்னத்தை நினைத்துக்கொள்ளுங்கள் —

அவ்வப்போது ஞானத்திற்காய்— உ-ம்) நெகே 2:1-5 ... (வச 4)

*''பரலோக தேவனை நோக்கி ஜெபித்தேன்''*

அதாவது, தந்திபோல் தேவனோடு உடனடித் தொடர்பு!

## ஆ) ஆலோசனை பெறுவதின் மூலம் ...

நீதி 20:18 ... *அறிவுரை கேட்டுத் திட்டமிட்டால் வெற்றி*

24:6 ... *ஆலோசகர் அநேகரானால் ...*

எவருக்குமே எல்லாம் தெரியாது —

பிறரது ஆலோசனை நாடவேண்டும் —

குறிப்பாக, வேலை கடினமும் பெரிதுமாயிருக்கையில்.

துரிதவுணர்வுடன் செயலாற்றவேண்டும்; அதே வேளையில்,

திட்டமிட நேரம் செலவழிப்பதைத் தியாகம்பண்ணக்கூடாது—

நீதி 21:5 ... *திட்டம் ... செல்வம் ... பதட்டம் ... தரித்திரம்*

— முக்கியமாக, முதியோரிடமிருந்து இளைஞர் கற்கவேண்டும்

யோபு 8:7-10 ... *விசாரிப்பு ... அறிவு ... உபதேசம் ...*

## இ) கிரமமான வேதத்தியானத்தின் மூலம் ...

தெளிவாய்ச் சிந்திக்கவும் திட்டமிடவும் இது ''புத்துணர்வு'' தரும் —

சங் 1:2,3 ... *நீரோட்டம் ... கனி ... இலை ... வாய்க்கும்*

இதைச் சித்தரித்துள்ள இன்னொரு வசனப்பகுதி —

நீதி 24:3,4 ... *ஞானம் ... விவேகம் ... வீடு ... அறைகள் ...*

விஞ்ஞானிகள் பலர் பைபிள் பிரியராயிருந்தனர் —

அவர்கள் ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தாலும்,

திருமறைத் தியானத்திற்கு நேரம் எடுத்துக்கொண்டனர்.

(உ-ம்) சர் ஐசக் நியூட்டன் (1642-1717):

*''பைபிள் போதிக்கும் மெஞ்ஞான மார்க்கத்தைவிட நிருபிக்கப்பட்ட விஞ்ஞானம் எதுவுமில்லை!''*

■ வேலை அதிகரிக்கையில், நாம் அதிகம் அழுத்தப்படுகிறோம்; இவ்வித வேளைகளில் சரியாய்ச் சிந்திக்கவும் தீர்மானிக்கவும் முடிவதில்லை; எனவேதான் வேலை கூடக்கூட ஜெபமும் கூடவேண்டும் —

(உ-ம்) நெகேமியா (நெகே 4:9,10)
இயேசு (லூக் 5:15-17)

■ அவ்வப்போது வேலை நிறுத்தி ஓய்வெடுப்பதும் அவசியம் —

☐ ஆதி 3:17ஆ ... நிலம் சபிக்கப்பட்டதால் வேலை கடினம்.
5:29 ... கர்த்தரிடம் திரும்பி ஓய்ந்திருக்கும்போது நல்ல முன்னேற்றம்

*''நோவா ... **வேலையில்** தேற்றுதல்''*

☐ யாத் 31:17 ... ஓய்வுநாள் என்பது **வேலையிலிருந்து** *ஓய்வு*
(இன்று அதற்குச் சடங்காச்சார முக்கியத்துவமில்லை)
— உடலுக்கும் மனதுக்கும் புதுப்பிப்பு

■ ''செய்யவேண்டியவை'' என்று ஒரு குறிப்பேடு வைத்துக்கொள்ளுங்கள்.

— காலைதோறும் ஒரு பட்டியல் எழுதி மாலையில் அதைத் திருப்பிப்பாருங்கள்

(உ-ம்) வாங்கவேண்டியவை என்றொரு பட்டியல் இல்லாது பேரங்காடிக்குள் சென்றால், விரும்பியதையெல்லாம் வாங்கி வேண்டியதையோ விட்டுவிடுவீர்கள்!

அப்படியே, 10 கன்னியரில் 5 பேர் **''செய்யவேண்டியவை''** என்றொரு பட்டியல் வைத்திருந்தார்களானால், எண்ணெயை எடுத்துச்செல்ல மறந்திருக்கமாட்டார்கள்!!!

## 4. நேரத்தை வீணடிக்கக்கூடாது.

Do not waste time.

- இது ஒரு புதிய அறிவுரை அல்ல;
  ஆனாலும் சராசரியான ஒரு நபர் தனது வாழ்நாட்களில் வீணடிக்கும் நேரம் நம்மைத் திகைக்க வைக்கும்!

3 விதங்களில் நாம் நேரத்தை வீணடிக்கிறோம்—

அ) ஒன்றுமே செய்யாதிருந்து ....

ஆ) தவறானதைச் செய்துகொண்டு .....

இ) எல்லாவற்றையும் செய்துகொண்டு ...

### அ) ஒன்றுமே செய்யாதிருந்து ...

- இதைத்தான் ‘‘சோம்பேறித்தனம்’’ என்கிறோம் —
  அளவுக்கு மிஞ்சிய தூக்கம் ஒரு காரணம் (நீதி 6:9-11)

இதற்கு நீதிமொழிகளில் பல குறிப்புகள் உண்டு —

19:15; 20:4,13;

24:30-34; 26:13-15

சிறந்த நிவாரணம்: ‘‘சீக்கிரம் தூங்கிச் சீக்கிரம் எழுந்திருங்கள்.’’

Early to bed; Early to rise!

விடிய விடிய கதை பேசுவது, TV பார்ப்பது, இவற்றைத் தவிர்த்திடுங்கள்.

இரவில்தான் நீண்டநேரம் நன்கு கவனம் செலுத்தமுடிகிறது
என்பது சில இளைஞரின் வாதம் —

இது விதிவிலக்குதான், விதியல்ல!

அதிகாலையில் எழுந்திராவிடில்,
பலியாவது ‘‘இறைவனோடு தனித்திருக்கும் வேளைதான்!’’

■ அசதியாயிருப்பது எவரையும் **பாழாக்கிவிடும்** —

இதைச் சாதாரணமாய் நினைத்துவிடவேண்டாம்!

நீதி 18:9 ... *வேலையில் அசதி ... அழிப்பவன்*

பகற்கனவு காணாதீர்கள் —

ஏசா 56:10 ... *காவற்காரர் ... குருடர் ... ஊமையர்*

— இறைப்பணியில் அசதி எவ்வளவு மோசம் பாருங்கள்:

எரே 48:10,11 ...*''கர்த்தரது வேலை ... அசதி ... சுகம் ... சாபம்''*

மத் 25:26 ... *''பொல்லாதவனும் சோம்பேறியுமான ஊழியன்''*

— எறும்பைப்போல் சுறுசுறுப்பாயிருங்கள்

நீதி 6:6-8 ... *தலைவனில்லை ... ஆனாலும் விறுவிறுப்பு ...*

— சுயமான செயலார்வத் தூண்டலுக்கு இயேசுவே சிறந்த மாதிரி

யோ 9:4 ... ***''நான்''*** *செயல்பட வேண்டும்!*

*நான்* ***''செயல்பட''*** *வேண்டும்!*

*நான் செயல்பட* ***''வேண்டும்!''***

— பவுலின் அறிவுரை :

இறைப்பணியாளர் *''மாடு''* போல் உழைக்கணும் (1 தீமோ 5:18)

— இயேசுவின் போதனை

☐ மத்தேயு 13இலுள்ள இறையரசு உவமைகள் —

''செயல் நிறைந்தவை'' —

விதைப்பவன் (வச 3)

சமையற்காரி (புளித்தமாவு) (வச 33)

உழவன் (புதையல்) (வச 44)

வியாபாரி (முத்து) (வச 45)

மீனவன் (நல்லது கெட்டதைப் பிரிப்பது)

(வச 47,48)

இவர்களையெல்லாம் கவனித்துப்பாருங்கள்!

''ஓடி ஓடி உழைக்கணும்!''

நேரத் *"துளிகளை"* வீணடிக்காது கவனமாயிருங்கள் — 12 கூடை!

சிறு துளி பெரு வெள்ளம்;

மணல் தூள்கள் உண்டாக்குவதே அழகு நிலம்!

## ஆ) தவறானதைச் செய்துகொண்டு ...

☐ வீண் அரட்டை

2 தெச 3:10-12 ... *வேலை செய்யாமல் பிறர் காரியங்களில்*

மத் 12:36 ... *"ஒவ்வொரு வீண் வார்த்தை"*

பேச்சைக் குறைப்பீர், வேலையைப் பெருக்குவீர்!

நீதி 14:23 ... *பிரயாசம் ... பயன் ... வீண் பேச்சு ... வறுமை*

☐ உங்கள் நேரத்தை வீணடிப்போருக்கும் எச்சரிக்கை —

(உ-ம்) ஓர் உயர் அதிகாரியின் மேசை வாசகம் :

| | |
|---|---|
| *வந்த காரியத்தைப் பேசு;* | *Talk of business;* |
| *வந்த வேலையை முடி;* | *Finish your business;* |
| *என் வேலையைப் பார்க்கவிடு!* | *Leave me to do my business!* |

நேரம் தவறாதிருங்கள்; (punctuality)

இல்லையேல் பிறர் நேரத்தை வீணடிப்பீர்கள்!

☐ பெருமளவில் நேரம் திருடும் கைபேசிகளுக்கு எச்சரிக்கை!

அப்படியே, தொலைக்காட்சிப் பெட்டியும்!

☐ நாளின் முடிவில்,

நீங்கள் தவிர்த்திருக்கக்கூடியவற்றைப் பட்டியலிடுங்கள்

— பயனற்ற, ஒன்றுக்கும் உதவாத காரியங்கள்

— புறங்கூறல், வம்புப் பேச்சு, அரட்டை, .....

☐ காலத்தைப் பயன்படுத்துங்கள்

எபே 5:16,17 ... *பொல்லாத நாட்கள் ... தேவ சித்தம்*

திருச்சித்தத்திற்குள் நம்மை அடக்கிக்கொள்ளும்போதுதான்,

நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தமுடியும்!

☐ பிசாசானவன் நேரத்தை வீணடிப்பதேயில்லை —
வெளி 12:12 ஆ ...*கொஞ்சக் காலம் ... மிகுந்த கோபம் ...*

☐ செய்யக்கூடாததைச் செய்து நேரத்தை வீணடித்தால்,
செய்யவேண்டியதைச் செய்ய நேரமில்லாது போகும்!

ஏற்கனவே நீங்கள் வாழ்வில் நேரத்தை வீணடித்திருந்தால்,
அதைக் கடவுளிடம் அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள்—
வீணாகிய ஆண்டுகளைத் திரும்பத்தர அவர் வல்லவர்!

அறிக்கையிடவேண்டியது: செய்யவேண்டியதைச் செய்யாது,
செய்யத்தகாததைச் செய்தேன்!

**இ) எல்லாவற்றையும் செய்துகொண்டு ...**

— பரசி அடிக்காதீர்.
— முக்கியமானவைகளை வரிசைப்படுத்துங்கள் ...
முக்கியமல்லாதவற்றில் பலத்தை வீணாக்காதிருங்கள் ...
(உ-ம்) 1970களில் சகோதரன் தினகரன் எனக்குச் சொன்னது:
''நீண்ட தூரம் நீங்களே கார் ஓட்டாதீர்கள்.''

— சில காரியங்களுக்கு ''இல்லை'' என்று சொல்லப் பழகுங்கள்.
அநேகக் காரியங்கள் **முக்கியம்தான்;**
ஆனால் **அவசியமானது** எது?
Important vs. Necessary

பொதுவாக, தேவையானது **''ஒன்றே!''** (லூக் 10:41,42)
மார்த்தாள் உலகில் மரியாள் உள்ளம் கொண்டிருங்கள்!

— நான் பிரசங்கிக்கச் செல்கையில்,
வீடு சந்திப்புகள், கலந்துரையாடல்களைக் குறைக்கிறேன் ...

(உ-ம்) லூக் 10:4,5 ... *வழியில் ஒருவரையும் வினவவேண்டாம்*
ஆனால் வீட்டிலோ, *சமாதானம் கூறுங்கள்!*

## 5. கடின உழைப்பிற்கு இறையருளைப் பதிலாக்கக்கூடாது.

(அல்லது, முயற்சிக்குத் திறமையைப் பதிலாக்கக்கூடாது.)
Do not substitute divine favour for hard work.

- நாம் இருப்பது தேவ கிருபையினாலேயே.
  நாம் இயங்குவது தேவ பலத்தினாலேயே.

நம்மெல்லோருக்கும் தேவன் வரங்கள், திறமைகள் தந்திருக்கிறார் —
மத் 25:14,15 ... 5-தாலந்துள்ளவன் இன்னும் 5 சம்பாதித்தான்
2-தாலந்துள்ளவன் இன்னும் 2 சம்பாதித்தான்
1-தாலந்துள்ளவனோ உழைக்கவே **இல்லை**

அதாவது, தனது ''திறமையைப்'' பயன்படுத்தவில்லை (வச 15)
தீர்ப்பு: வச 26,28,30 ... *பொல்லாதவன் ... சோம்பேறி ... தெண்டம்*

முயற்சியின்மையைக் கடவுள் எவ்வளவாய்க் கண்டிக்கிறார்!

இவையிரண்டிற்குமுள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுங்கள் —
திறமை — வியர்வை
அறிவாற்றல் — உழைப்பு
உள்ளார்வம் — உடலூக்கம்
பொதுவாக, 10 சதவீதம்தான் உள்ளார்வம் (inspiration)
90 சதவீதமோ உடலூக்கம்தான் (perspiration)

நன்கு உழைக்காதவர் கடவுளைப் பாரபட்சமுள்ளவர் என்பர் —
(உ-ம் ) *''யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்!''*
(ரோ 9 :13)
ஆனால், யாக்கோபு எவ்வளவாய் உழைத்து முன்னேறினான்,
பாருங்கள்!

அவன் லாபானிடம் சொன்னதைக் கவனியுங்கள் —
ஆதி 31:40 ... *பகலும் இரவும்*
:39 ... தொலைந்தவைகளுக்காய்ச் சாக்குப்போக்கல்ல.
அவனது பாதை சுமூகமாயிருக்கவில்லை!

■ ''தேவ கிருபை'' அத்துடன் ''கடின உழைப்பு''
என்பதற்கு நேர்த்தியான இரு எடுத்துக்காட்டுகள் —

**பழைய ஏற்பாடு:** நெகேமியா

திரும்பத் திரும்ப ''தேவ தயவு'' குறிப்பிடப்பட்டுள்ளது.
நெகே 2:18,20 ... *தேவ கரம் ... பரலோகின் தேவன்*
4:20 ... *நமது தேவன் நமக்காய் யுத்தம்பண்ணுவார்*
6:16இ ... *இந்த வேலை தேவனால் கைகூடிவந்தது*

அதே வேளையில், மக்களும் கடினமாய் உழைத்தனர்!
4:6,21 ... *வேலை செய்ய ஆவல்*

**புதிய ஏற்பாடு:** அப்போஸ்தலன் பவுல்

1 கொரி 15:10 ... *''எல்லாரையும்விடப் **பிரயாசம் ... கிருபை''***
ரோ 1:15 ... *''என்னால் இயன்றவரை ...''*

அனுதின ஆகாரத்தைத் தேவன் வாக்கருளியிருந்தபோதிலும்
இதுவே அப்போஸ்தலரின் பாரம்பரியம் —

இறைவாக்கு :
மத் 10:9,10 ... *வேலைக்காரன்...ஆகாரத்திற்குத் தகுதியானவன்*
6:31-33 ... *இவையெல்லாம் கூடக்கொடுக்கப்படும்*
அப்போஸ்தலரின் உழைப்பு: 2 தெச 3:7-9 ... *வேலை ... வருத்தம்*

■ தவறான கூற்று:
**''எல்லாம்** கடவுள் கையில்! நான் என்ன செய்வது?''

இரு எடுத்துக்காட்டுகள்
ரோ 9:16 ... ஓட்டப் பந்தயம்
— முழு **பலத்துடன்** நீங்கள் **ஓடவேண்டுமே!**

1 கொரி 3:7,8 .... விவசாயம்
— நீங்கள் நட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டுமே!
பலன்: *''தன் தன் **வேலைக்கு** ஏற்றபடி''* (வச 8)

இன்னொரு தவறான கூற்று:

மத் 6:26 ... *பறவைகளைப் பாருங்கள் ...*

வேலை செய்வதேயில்லையே???

இவ்வசனம் *''கவலை''* கூடாது என்பதற்கே (வச 27);
''வேலை'' தேவையில்லை என்பதற்கல்ல —

பறவைகள் தீனி தேடுவதில்லையா? கூடு கட்டுவதில்லையா?
சோம்பேறித்தனமாகவா இருக்கின்றன?

எல்லாமே தேவனால்தான் என்றெண்ணி வேண்டுங்கள்;
எல்லாமே உங்களால்தான் என்றெண்ணி வேலைசெய்யுங்கள்!

Pray as if everything depends on God;
Work as if everything depends on you!

- ''கடின உழைப்பிற்குத்'' தேவன் தமது பாணியில் பலனளிப்பார்—
  - ☐ பிலிப்பு ... ''இரதத்தை'' முந்த வனாந்தரத்தில் ஓடினான்
    அப் 8:29,30அ
    ... திரும்பியது ''விமானப்'' பயணம் மூலம் (வச 39)
  - ☐ 5-தாலந்துள்ளவனுக்கு இன்னொரு தாலந்து! (மத் 25:28,29)
- கிறிஸ்தவ ஊழியருக்கு ஒரு வார்த்தை:
  *''நிறைய விதையுங்கள் ...''* (2 கொரி 9:6)

  எதைக் ''கடவுள்'' விளையச்செய்வார் என்று தெரியாதல்லவா?
  பிர 11:5ஆ,6 ... *காலையில் ... மாலையில் ... விதைத்திடு ...*
- தமிழரே, மலையாளிகளின் ஆதிக்கம் என்று குற்றஞ்சாட்டாதீர்.
  பொதுவாகவே, மலையாளிகள் கடின உழைப்பாளிகள்.
- தடம் புரளாமல் தரித்து நிற்க ஓர் அழைப்பு —
  **அரைகுறை** செயல்களாலேயே சிலரது வாழ்க்கை நிறைந்துள்ளது!

  இது துரித, உடனடி விளைவுகளை எதிர்பார்க்கும் யுகம்.
  நீங்கள் இளமையாயிருக்கும்போதே, எதையும் பொறுமையாய்ச்
  செய்து ''முடிக்க'' உங்கள் மனதைப் பயிற்றுவிக்கவேண்டும்!

  மாணவப் பருவத்தில் நான் பெற்ற பயிற்சிகள் :
  நெசவு / தச்சு வேலை / இரும்பு வேலை / வார்ப்பு வேலை

## 6. பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தயங்கக்கூடாது.

Do not hesitate to learn from others.

- கூடுதல் சிறப்பாய்ச் செய்ய **மாற்றத்தை** ஏற்கும் மனது தேவை.
 வளையாபதியாய் அல்ல, இசைவுள்ளவராய் இருங்கள்.
 பிறரிடமிருந்து கற்க நம்மைத் தடுப்பது தற்பெருமையே.

- கற்றுக்கொள்ள வேண்டுமானால்,
 கூர்ந்து கவனிப்பவராய் இருக்கவேண்டும்—

 □ இயேசுவானவர் எதையும் கூர்ந்து கவனிப்பவராயிருந்தார் —
 இல்லையேல் கீழ்க்கண்டவை அவருக்கு எப்படித் தெரிந்திருக்கும்?

 — மாவு புளிக்கவைத்தல், திருகலில் அரைத்தல்:
 — தைத்தல் (ஊசி): வீட்டு வேலை [சமையலறை வேலை
 — விதைத்தல் & அறுத்தல்: பண்ணை வேலை
 — மீன்களைப் பிரித்தல்: மீன் பிடிக்கும் தொழில்
 — பணி நியமனம்: வேலை & கூலி

 முக்கியமாக, தமது தந்தையிடம் தச்சுத்தொழில் கற்றார் —
 மத் 13:55 ... *''தச்சன் மகன்''*
 மாற் 6:3 ... *''தச்சன்''*

 □ அப்போஸ்தலன் பவுலும் கூர்ந்து கவனிப்பவனாயிருந்தான் —

 — விளையாட்டுகள்: கட்டுப்பாட்டுடன் கிறிஸ்தவ ஓட்டம் (1 கொரி 9:24-27)

 — நடுதலும் நீர்ப்பாய்ச்சுதலும்:
 பொறுமையுடன் உழைக்கவேண்டிய கிறிஸ்தவப் பணி (1 கொரி 3:6,7)

 — தாவர ஒட்டு: இஸ்ரவேலர் VS. புறவினத்தார் (ரோ 11:16-20)

 — கட்டிடம்: கிறிஸ்துவே அடித்தளம்,
 மேற்கட்டிடத்திற்குப் பொருட்கள் (1 கொரி 3:10-14)

☐ தீமோத்தேயுவும் நன்கு கவனித்துக் கற்பவன் —

2 தீமோ 3:14 ... *யாரிடம் கற்றாய் என்று* ...

எனவேதான் அவன் ஒரு தலைவனானான் —

1 கொரி 16:10 ... பவுல்: *என்னைப்போல் ... செயல்படுகிறானே*

☐ முடி திருத்துபவர், சலவைத் தொழிலாளர், தீப்பெட்டி செய்வோர்—
இவர்களையெல்லாம் நான் நின்று கவனிப்பேன்.

விளைவு : எனக்கு நானே முடிவெட்டுகிறேன்; மிஷனரிகளுக்கு
வெட்டிவிடுவேன்; ஆடைகளைத் தேய்ப்பேன்; இப்படிப் பல

■ பிறரிடமிருந்து கற்கவேண்டுமானால் —

எல்லாம் தெரியும் எனும் மனப்பான்மை கூடாது.

பிறர் செய்வதைப் பாராட்டும் மனப்பக்குவம் வேண்டும்.

■ கற்றுக்கொள்வதற்கு இன்னொரு சாவி: சகச்சார்பு —

நீதி 27:17 ... *இரும்பை இரும்பு கூராக்கும்.*

குழுவாய்ச் செயல்பட ஓர் அழைப்பு —

அ) பிறர்மீது பழி சுமத்தாதீர்

''நான் வருந்துகிறேன்''...

''நான் கூடுதல் கவனமாயிருந்திருக்கவேண்டும் ...''
என்றெல்லாம் சொல்லத் தயங்கக்கூடாது.

ஆ) பாராட்டையெல்லாம் உங்களுக்கே எடுக்காதீர்

யோ 4:36 ... *விதைக்கிறவன், அறுக்கிறவன் ...* ***இருவரும்*** ...

அதாவது, **பலாபலன்** இருவருக்கும்!

:38 ... *''**மற்றவர்** பிரயாசப்பட்டனர்!''*

இ) தனித்தே ஆடாதீர்

(உ-ம்) யோவாப் (2 சாமு 10:9-12)

*... நீ எனக்குதவி ... நான் உனக்குதவி ...*

■ கற்றுக்கொள்வது ஒருவழிப்பாதையே அல்ல —
இளைஞர்தான் முதியோரிடம் கற்கவேண்டும் என்பதுமல்ல;
முதியோரும் சிறுவர், வாலிபர், கீழ்நிலையினரிடம் கற்கலாம்.

— இதுதான் சரியான முதிர்ச்சி
சங் 119:99 ... *போதித்தவர்களைவிட அறிவு* ...
:100 ... *முதியோரைவிட ஞானம்* ...

■ முதியோருக்கும் திறமைசாலிகளுக்கும் ஒரு வார்த்தை :

□ எவரோ எதோவொன்றைச் சரியாய்ச் செய்யவில்லையெனக்
கண்டால், பண்பாக உதவிக்கரம் நீட்டுங்கள்;
இது தேவையற்ற தலையீடு அல்ல.

□ ''தொழில் ரகசியங்களை'' இளைஞரோடு பகிரத் தயங்காதீர்.
என் தந்தை பிரசங்கக் குறிப்புகள் தயாரித்தது
எனக்கு உள்ளார்வம் தந்தது.

பிரசங்க ஆயத்தக் கலையில் எத்தனையோ
வாலிபரைப் பயிற்றுவித்திருக்கிறேன்.
அடுத்த வரிசையினர் நம்மை ''மிஞ்சினால்'' மகிழவேண்டும்!

■ வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டேயிருக்கவேண்டும் —
அவசரக் கட்டங்களில் எதையும் செய்ய முடியவேண்டும் —

□ எருசலேமின் மதில்கள் திரும்பக் கட்டப்படுதல்:
பழுதுபார்த்தது யார்?
தட்டார், தைலக்காரர் (நெகே 3:8)
லேவியர், ஆசாரியர் (வச 17,22)
காவலர், மளிகைக்காரர் (வச 29ஆ, 32ஆ)

□ அடர்ந்த காட்டிற்குள் பவுல் விறகு பொறுக்கப்போய்,
ஒரு பாம்பையும் சேர்த்து,
வழக்கைத் (?) தலையில் சுமந்துவந்தான்! (அப் 28:1-3)

(பார்க்க: பக்கங்கள் 59-61, 303-306, 350-351, 380-384, 546-549, 642-646)

## 7. சேவை மனப்பான்மையை இழந்துவிடக்கூடாது.
Do not lose the spirit of servanthood.

- அநேகர் சேவையுணர்வுடன்தான் தங்கள் பணியைத் துவங்குகின்றனர்; நாளாவட்டத்திலோ அதை இழந்துவிட்டு, வேலையில் திறமை என்றே ஆகிவிடுகின்றனர்.

  பிறர் நல நாட்டம் நமது பணிக்காலம் முழுவதும் நீடிக்கவேண்டும்.

- 3-வகை மக்களுக்கு நன்மை செய்யும் கடமை நமக்குண்டு — 1 கொரி 10:32,33
  - அ) *யூதர்* — பெயர்க் கிறிஸ்தவர்
  - ஆ) *புறவினத்தார்* — கிறிஸ்தவரல்லாதோர்
  - இ) *தேவனது சபை* — உண்மைக் கிறிஸ்தவர்

- 1971-75இல் வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் (CMC) பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

  இம்மனையின் குறிக்கோள்: *"சேவை பெற அல்ல, சேவை செய்ய!"*
  Not to be served, but to serve!

  உலகிலுள்ள பொதுவான நிர்வாகத்தைக் குறித்தே இயேசுவானவர் இவ்வார்த்தைகளைச் சொன்னார் —

  மாற் 10:42-45 ... *புறவினத்தாரின் அதிகாரிகள் ... பணிவிடை ...*

- மனிதக் கழிவை வெளியே எடுத்துச் செல்லுவோரது சேவையுணர்வு என்னை எப்பொழுதும் வியக்கச் செய்கிறது.

  மனிதாபிமானமற்ற இப்பழக்கம் இன்றும் இந்தியாவிலுண்டு —

  யாரோ அவர்களிடம் இப்படிக் கேட்டாராம்:
  "நீங்கள் வேலை நிறுத்தம் செய்தாலென்ன?"

  அவர்களது பதில்: "ஐயோ, ஊரே நாறிவிடுமே!"

மகாத்மா காந்தி சொன்னது: ''நான் இன்னொரு முறை பிறந்தால்,
தோட்டியர் சமுதாயத்திலேயே பிறக்க விரும்புகிறேன்;
அப்பொழுதுதான் அவர்களது பிரச்னைகளை நன்கு புரிந்து
அவர்களை உயர்வடையச் செய்யமுடியும்!''
— *Frontline* Magazine, Sept 2006

இதில் காரியம் என்னவெனில்: ''தொழிலின் மேன்மை''
''Dignity of labour''

''எவ்வேலையும் மற்றதைவிடத் தாழ்வானதோ
உயர்வானதோ இல்லை!''

■ வியாபாரம் செய்பவர்களுக்கு ஓர் அழைப்பு:

நீங்கள் ஒரு கிறிஸ்தவ வியாபாரியாயிருந்தால்,
வாடிக்கையாளருக்குச் சேவை செய்வதே உங்கள்
குறியாயிருக்க வேண்டும் —

நீதி 11:26 ... *பதுக்குவோர் மீது சாபம்* ...

(உ-ம்) யோசேப்பு சேவை மனப்பான்மையால் நிறைந்திருந்தான். வரவிருந்த 7-ஆண்டு பஞ்சத்தின்போது தானியங்களை வினியோகிக்க ''யாரையாவது'' நியமிக்கப் பார்வோனிடம் சொன்னான் (ஆதி 41:33)

அப்பதவியை அவன் இரகசியமாய் இச்சிக்கவில்லை!
''யோசேப்பைப்போல் வேறு யார்?'' என்றது பார்வோன்தான் (வச 38)

இந்தியாவில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வினியோகத்தில் ஊழல் பெருகியிருக்கிறதென நெடுகவே கேள்விப்படுகிறோம்.

காரணமென்ன? எளியோர்மீது கரிசனையில்லை!
திருடராயிருந்தாலும் ''கொடுப்பதற்காய்'' உழைக்கணுமாம் —

எபே 4:28 ... *இனித் திருடாமல் ... கொடுக்க* ...

■ சேவை மனதுள்ளோருக்குப் பணக் காரியங்களில் உண்மையென்பது இயல்பானது — குறிப்பாக, வரிசெலுத்துவதில் :

வரிகள் = மக்களுக்கு உதவ அரசுக்குக் கொடுக்கும் பணம்
(உ-ம்) சாலையமைத்தல், போக்குவரத்து, வீட்டுவசதி, முதலியன

இது நமது மனதில் பதிந்தால், வரி செலுத்துவது
வருத்தமாயிராது, விருப்பமாகிவிடும்!

(உ-ம்) தேவாலய வரியாயிருந்தாலும் ... (மத் 17:24-27)
இயேசு ஓர் *''அந்நியர்''* அல்ல;
தேவாலயச் சொந்தக்காரரின் ''குமாரன்!''
— *''என் பிதாவின் வீடு''*

அது சுலபமாய் வந்த பணமும் அல்ல:
*கடலுக்குப் போ ... தூண்டில் போட்டுப் பிடி ...*
*''முதல்'' மீன்!* தூண்டில் போட்டதும் கிடைத்துவிடுமோ?
அதில் எவ்வளவு ''வேலை'' அடங்கியிருக்கிறது!

- சேவை மனது இருந்தால் உடன் ஊழியரிடமும் கீழுள்ளவரிடமும் இணக்கவணக்கமாய் நடந்துகொள்வோம் —

(உ-ம்) நெகேமியாவிடம் மன்னன் (நெகே 2:2)
*''உன் முகம் வாடியிருப்பதேன்?''*

உடன் கைதிகளிடம் யோசேப்பு (ஆதி 40:7)
*''உங்கள் முகங்கள் இவ்வளவு வாடியிருப்பதேன்?''*

நமக்குக் கீழ் வேலை செய்வோரை மிரட்டுவது சேவை மனதல்ல —
அது கிறிஸ்தவத்திற்கு எதிரானது! (எபே 6:9)

- வேலை வேலை என்றிருப்போருக்கு ஒரு வார்த்தை:
  தொழிலையே தொழுதுகொண்டிராதீர்!
  வேலையானது முடிவானதல்ல;
  வேறொன்றிற்கு அது பாதை —
  ''கடவுளை மகிமைப்படுத்த, மக்களை ஆசீர்வதிக்க'' (ரோ 14:18)

- திருப்பணியிலிருப்போருக்கு ஒரு வார்த்தை —
  முதலாவது நீங்கள் ''வேலைக்காரன்,''
  அடுத்துதான் ''அப்போஸ்தலனோ'' வேறு எதுவுமோ!

  பவுல்: ரோ 1:1 / தீத் 1:1
  பேதுரு: 2 பேது 1:1

- சேவை மனப்பான்மைக்குப் பலாபலன் உண்டு —
  நீதி 17:2 ... *வேலைக்காரர் ▸▸ குமாரர் / சகோதரர்*
  1 தீமோ 3:13 ... *உதவிக்காரர் ▸▸ உயர் நிலை*

## 8. உடலைக் கவனியாது விடக்கூடாது.

Do not neglect your body.

- எனது தந்தை அடிக்கடி கூறியது:

  *''சுவர் இருந்தால்தான் சித்திரம்!''*

  ஆனால் எனது கல்லூரி நாட்களிலும் ஊழியத்தின் துவக்கக் காலங்களிலும் உடலைப் பேணுவதில் ஓர் அலட்சியம்.

- உடலைப் பேணாதிருப்பது ஆன்மீகமல்ல—

  உடலுக்காகக் கடவுளிடம் நன்றியுணர்வுடனிருக்கவேண்டும்—

  தாவீது: சங் 139:13-16 ... *பிரமிப்பு ... அதிசயப் படைப்பு ...*

  *''என் ஆத்துமா'' நன்கறியும்* (வச 14)

  உடலைக் கவனியாதிருப்பது வீண்மனப்பான்மை —

  கொலோ 2:20-23 ... *சுய விருப்ப ஆராதனை ... பயனற்றது*

  தவறான கருத்து: உடலை அலட்சியப்படுத்துமளவிற்கு ஆன்மா செழிக்கும்!

- தவறான மேற்கோள் :

  1 தீமோ 4:8 ... *''சரீர முயற்சி அற்ப பயன்''*

  பக்தி முயற்சிகளை **அலட்சியப்படுத்தி**, அளவுக்குமீறி உடலிலேயே கவனமாயிருப்பதற்கு எதிரான எச்சரிக்கை இது (வச 15)

  *''இந்த வாழ்வு''* vs. *''இனிவரும் வாழ்வு''*

- அளவுக்குமீறிய ஆர்வங்கள் மனத்தொய்வை உண்டாக்கும் —

  இயேசுவின் காலத்திலேயே லட்சங்கள் இந்தியாவில் அழிந்துகொண்டிருந்தாலும் அவர் இங்கு வரவில்லையே!

  ஆனாலும், அவர் சொன்னது,

  *''**நான்** செய்யும்படி **நீர்** நியமித்த பணியைச் செய்து முடித்தேன்''* (யோ 17:4)

பலவற்றிற்கு அவர் ''இல்லை'' என்றதாலேயே இது சாத்தியமாயிற்று—
(உ-ம்) நாசரேத்தைவிடக் கப்பர்நகூமில் கனிகள் அதிகமானதால்
கூடுதல் சில நாட்கள் அங்கிருக்க வேண்டுகோள் (லூக் 4:42,43)

அதேபோல், அப்போஸ்தலரும் —
2 கொரி 10:13,14 ... *அளவுக்கு மிஞ்சி ... அளந்து பகிர்ந்த ...*

எனது சொந்த சாட்சி:
நான் ''மறுப்பு'' தெரிவித்தவை —
☐ ஊழியத் தலைமையகத்தைச் சென்னைக்கு மாற்ற ...
☐ அழைப்புவரும் கன்வென்ஷன்களிலெல்லாம் பிரசங்கிக்க ...
☐ ''அகிலவுலக'' ஊழியத்திற்காக, பிரபலப் பிரசங்கிமார் பலர் செய்ததுபோல, அமெரிக்காவிற்குக் குடிபோக ...
☐ தமிழ் வேதத்தின் புதிய மொழியாக்கத்தில் ஈடுபட ...

இந்தக் கவர்ச்சிகர வாய்ப்புகளுக்கு ''இல்லை'' என்றிராவிடில்,
இத்தனை புத்தகங்களை நான் எழுதியிருக்கமுடியாது ...
இத்தனை மிஷனரிகளை உருவாக்கியிருக்கமுடியாது ...
இத்தனையாய்த் திருமறையிலிருந்து உபதேசித்திருக்கமுடியாது.

50ஆம் வயதில் (1996) இதய அறுவை சிகிச்சைக்காய் எடுத்துச் செல்லப்பட்டபோது, ''இன்னும் முடிக்க வில்லையே'' என்ற பதட்டம் எதுவுமில்லை!

■ உடலே சொல்லுபவைகளுக்கு மிஞ்சி உங்களை வருத்தாதீர்.
களைத்த குதிரையை இன்னும் அடிப்பதா?
தவறான மேற்கோள்: *''எல்லாம் செய்யப் பலமுண்டு!''* (பிலி 4:13)
*''எல்லாம்''* என்றால் *''வாழ்ந்திருக்கவும் தாழ்ந்திருக்கவும்''*

கூடுதல் மணி நேர வேலை கூடுதல் பணம் தரலாம்;
நாளாவட்டத்திலோ, கூடுதல் வேலை செய்து சம்பாதித்தது
மருத்துவச் செலவில் காலியாகிவிடும்! (நீதி 23:4,5)

நேரத்திற்கு நேரம் சாப்பாடு: இயேசு (மாற் 6:31,32)
ரசித்து ருசித்துச் சாப்பிடுதல்: இயேசு (மத் 11:19)
*''பெருந்தீனிக்காரன்''* என்றுகூட அழைக்கப்பட்டார்!

ஓய்வின் அவசியம் —

தேவ நியமனம்: யாத் 23:12 ... *இளைப்பாறவும்* ...
31:17 ... *ஓய்ந்து* ... *பூரித்தார்* ...

சீனாய் மலையில் மோசேயிடம் தேவன் பேசிய
முடிவு வார்த்தைகள்! (வச 18)

10-நாள் வாரமென்று ஜப்பான் முயன்று தோல்வி கண்டது!
— ஏராளம் விபத்துக்கள் / உற்பத்தி குறைவு / முதலியன

நெகிழ்வூட்டுதல், பொழுதுபோக்கு, இவையெல்லாம் அவசியம் —
இசைகேட்டல், புத்தகம் வாசித்தல், முதலியன.
இது உடலெனும் இயந்திரத்தை ''அயர்வகற்றலாம்!''

உடற்பயிற்சி: நடத்தல், மிதிவண்டி ஓட்டுதல், விளையாட்டுகள், ...
— இவையெல்லாம் நேர வீணடிப்பு அல்ல;
சொல்லப்போனால், இன்னும் நன்கு வேலைசெய்ய உதவும்!

பாலர் பள்ளியில் படித்த குறும்பாடல்:

| | |
|---|---|
| *Work while you work;* | *வேலை நேரமா? வேலைசெய்!* |
| *Play while you play;* | *விளையாட்டு நேரமா? விளையாடு!* |
| *This is the way* | *மகிழ்ந்து மலர்ந்திருக்க* |
| *To be happy and gay!* | *இதுவொன்றே வழி!* |

பொறுப்புகளைப் பகிர்வது நாம் விரைவில் தொய்வடைவதைத் தடுக்கும்:

(உ-ம்) எத்திரோ — மோசே (யாத் 18:14,18,22,23)
*''காலைமுதல் மாலை வரை''* செய்த வேலையில்
மோசே தொய்வடைந்தான்.

தான் செய்வது சரியென்றுகூட சொல்லிக்கொண்டிருந்தான் (வச 16).
ஆலோசனை: 1000, 100, 50, 10 பேருக்குத் தலைவரை ஏற்படுத்து.
*''பெரிய காரியங்கள்''* vs. *''சிறிய காரியங்கள்''*

## 9. சிறிய காரியங்கள்தானே என்று அசட்டையாயிருக்கக்கூடாது.

Do not underestimate the importance of small things.

- காலையில் எழுந்ததும் படுக்கையை மடிப்பது போன்ற சிறிய காரியங்களில்தான் வாழ்க்கையில் ஒழுக்கம் துவங்குகிறது!

(உ-ம்) 2006இல், லண்டன்-சென்னைப் பயணத்தில்,
விமானத்தில் தரப்பட்ட கம்பளத்தை,
தரையிறங்குமுன், சகோதரன் ஜாஷ்வா தானியேல் (LEF)
அவர்கள் மடித்துவைத்தார்!
இப்படிச் செய்யாத என்னை அது நாண வைத்தது!

— வாலிபரே! காலுறைகள், லுங்கிகளை எங்கும் தூக்கியெறியாதீர்.
குளியலறையைச் சுத்தமாய் விட்டுச்செல்வீர்.

— ஆள் தோற்றம்:
தினசரி முகச்சவரம் / அவ்வப்போது சிகை திருத்தம் / ...
உடை: கச்சிதமாய், சுத்தமாய் ...
நன்றாய் உடுத்துவீர் (பிர 9:8) ... *உடைகள் ... எண்ணெய்* ...
உபவாசிக்கும்போதும்! (மத் 6:17) ...
*முகம் கழுவி, எண்ணெய் தேய்த்து* ...

- வேலையில் துல்லியமாயிருங்கள் —

(உ-ம்) King James Version Bible — அச்சுப்பிழை திருத்தியோர்.
நமது பாடல் புத்தகங்கள், பத்திரிகைகளில், ஐயோ, எத்தனை பிழைகள்!

இதன் மூலம் நான் சவால் பெற்றேன் —
— எனது மாணவப்பருவத்தில், 1966இல், எழுதப்பட்ட *“விடுதலையின் நற்செய்தி”* எனும் பிரதி பிழைதிருத்தம்.
— ஆங்கிலத்திலும் தமிழிலும் *ஆசீர்வாதப்* பத்திரிகையின் 333 இதழ்கள்.
(1996இல் இருதய அறுவை சிகிச்சைக்குப்பின் மருத்துவ மனையில் இருக்கும்போதும் ...)

■ ஏன்?

சிறிய காரியங்களில் உத்தமம் ⏩ பெரிய விவகாரங்கள்

லூக் 16:10 ... *கொஞ்சத்தில் உண்மை ... அநேகத்திலும் ...*
19:17 ... *கொஞ்சத்தில் உண்மை ... 10 நகர்கள்*

சிறு காரியங்களில் கவனக் குறைவு பெரிய குழப்பங்களை உண்டாக்கிவிடமுடியும் —

பிர 10:1 ... *செத்த ஈக்கள் ... ''சொற்ப'' மதியீனம்*

சொந்த சாட்சி: கைப்பிரதிகள் மடித்தல்
அஞ்சல் தலைகள் ஒட்டுதல்
பொட்டலங்கள் கட்டுதல்

இன்று — வளர்ந்து பெருகும் ஓர் இலக்கியப்பணி —
இயக்கப் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும்!

■ ''சிறிய'' காரியங்களுக்குப் பொறுப்பாய் வைத்துதான் பொதுவாகக் கடவுள் நம்மைப் பரீட்சித்துப் பார்ப்பார் —

☐ யோசேப்பு:

— உத்தமமாய் மந்தை மேய்த்துவந்தான் (ஆதி 37:2)
— சகோதரரை விசாரிக்கக் கீழ்ப்படிந்து சென்றான் (வச 13,14)
— பார்வோனின் வீட்டில் உண்மையாய்ப் பணியாற்றினான் (39:4)

இறுதியாக, எகிப்துக்குக் கவர்னராய் உயர்த்தப்பட்டான்!
ஆம், *''வேலையில் கவனமாயிருப்பவனைக் கண்டால்''* (நீதி 22:29)

☐ அப்படியே, தாவீது:

— உத்தமமாய் ஆடு மேய்த்தான் (1 சாமு 16:11)
**அப்பொழுதுதான்** ''அபிஷேகிக்கப்பட்டான்'' (வச 13)
— சகோதரர்க்குப் பதார்த்தங்கள் எடுத்துச்சென்றான் (1 சாமு 17:17,18)
**அப்பொழுதுதான்** கோலியாத்தைச் சந்தித்தான் (வச 23)

எனவே —
*''அற்பமான ஆரம்பத்தின் நாளை''* அசட்டைசெய்யாதீர் (சக 4:10)

- திருமறைச் சரித்திரம் மட்டுமல்ல, உலகச் சரித்திரத்திலும்:
  - ☐ வில்லியம் கேரி — உத்தமமான செருப்புத் தொழிலாளி ... இன்றைய மிஷனரிப்பணிகளின் தந்தையானார்!
  - ☐ ஷேக்ஸ்பியர் — அரங்கங்களுக்கு வெளியே குதிரைகள் பிடித்து நின்றவர் மிகப்பெரிய நாடக ஆசிரியரானார்!

- கிறிஸ்தவ ஊழியத்தில் —

அ) தனியாள் ஆத்துமாதாயம், பிரதிகள் வினியோகம், இப்படித் துவங்குங்கள்.

ஆ) *''இருவர் அல்லது மூவர்''* கூடி ஜெபிக்கும் குழுவொன்றைத் துவக்குங்கள்.

''இறையரசில்'' எதுவுமே எளிய, சிறிய துவக்கமே —
மாற் 4:30-32 ... *கடுகு விதை ... பெரிய கிளைகள் ...*

- இன்னொரு காரியம் —

மத் 23:25,26ஐத் தவறாய் வியாக்கியானித்தல் —

*''உட்புறம்தான்''* முக்கியம் என்பார்!
இயேசு அப்படிச் சொல்லவே **இல்லை!**
எது அதிமுக்கியம் என்றுதான் சுட்டிக்காட்டினார்!
பின்னர் *''வெளிப்புறத்தையும் ...''* என்றாரல்லவா?

ஒன்றுக்காய் ஒன்றை விடாதீர்!
— பயன்பாடும் வேண்டும், பார்வைக்கழகும் வேண்டும்!
''Utility and Beauty''

(உ-ம்) சமைத்தலும் பரிமாறலும்:
நாவிற்குச் சுவை ...
கண்களுக்கு விருப்பம் ...
''மகிழ்வுடன்'' உண்ணவேண்டும்.
பிர 9:7 ... *ஆனந்தம் ... மகிழ்ச்சி ... ''வேலைகள்''*

## 10. வேலையில் உற்சாகம் இழக்கவே கூடாது.

Do not ever lose enthusiasm in work.

- வேலையை நேசித்தால்தான் அதில் நேர்த்தியாயிருக்கமுடியும்.

  எனவேதான் எதையும் *''மனப்பூர்வமாய்ச்''* செய்யும்படி
  விவிலியம் நம்மையழைக்கிறது (கொலோ 3:24)

காலைதோறும் தாவீதின் விண்ணப்பத்தை ஏறெடுப்போம் —
சங் 51:12,13 ... *''மகிழ்ச்சி ... உற்சாக ஆவி''*

''மனமகிழ்வு'' இருந்தால்தான் நன்கு வேலை செய்வோம் —
நெகே 8:10ஆ ... *கர்த்தருக்குள் மகிழ்ச்சி ... உங்கள் பலம்*

- வேலையில் ''மகிழ்ச்சிக் கொல்லிகள்'' சிலவற்றைப் பார்ப்போம் —

### அ) திரும்பத் திரும்ப ஒரேவித வேலை

கீழ்வரும் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள் :

— எதற்காய் இதைச் செய்கிறேன்?
— எவருக்கு இதனால் மகிமை?
— எவருக்கு இதனால் நன்மை?
— என்னை இங்கு வைத்தது தேவனல்லவா?

இவற்றிற்கான பதில்கள் நோக்கையும் போக்கையும் சீராக்கும்.

☐ நமது உள்ளுறுப்புகள் ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதால் சோர்வடைகின்றனவா?

☐ அப்படியே, விதைப்பும் அறுப்பும்; மாரியும் கோடையும்
ஆதி 8:22 ... அவை *ஒழிவதில்லை* ...

எவ்வித வேலையிலும், திரும்பத் திரும்ப ஒரே விதமாய்ச் செய்துவந்தால், உற்சாகம் குறைவது இயல்புதான்.

எனவேதான் திருமறை தரும் அறிவுரை —

எபி 6:12 ... *''அதே கவனம் ... முடிவு வரை ... ''*

ரோ 12:11 ... *''அசதியாயிராமல் ...''* (lagging or sagging)

தினமும் நம்மை நாமே தட்டியெழுப்பவேண்டும்;

பரவசமாய் எதுவும் நிகழவேண்டுமெனக் காத்திருக்கக்கூடாது.

வேலையில் அடுத்த ''மகிழ்ச்சிக் கொல்லி'' —

## ஆ) தோல்விகளினால் விரக்தி

தமது வேலைகளைக் குறித்து, இயேசுதான் அவர் காலத்தில்,
வேறு எவரையும்விட, விரக்தியடைந்திருக்கவேண்டும் —

(உ-ம்) மத் 11:20 ... பல ஊர்களில் ஊழியம் கனி நிறைந்ததாயில்லை.

(உ-ம்) *கோராசின் ... பெத்சாயிதா ... கப்பர்நகூம்*

அவரோ ''கசந்து'' கொள்ளவில்லை —
மாறாக, நல்ல காரியங்களுக்காய்ப் பிதாவைத் ''துதித்தார்'' (வச 25)
இச்சமயத்தில்தான் *''இளைப்பாறும்படி''* பிறரை அழைத்தார் (வச 28)

இது அவரைக்குறித்த தீர்க்கதரிசனம் —

ஏசா 42:4 ... *நியாயத்தை நிலைப்படுத்தும்வரை ...*

☐ களிமண்ணில் திரும்பத் திரும்ப வனையும் குயவனுக்குக்
கடவுள் தம்மை ஒப்பிடுகிறார் (எரே 18:3-6அ)

☐ தாமஸ் ஆல்வா எடிசன் (18ஆம் நூற்றாண்டு):
மின்சார பல்பு கண்டுபிடித்தவர் —
எத்தனையோ தோல்விகள், ஆனால் அவர் சொன்னது:
''மின் இழைக்கு எத்தனை உலோகங்கள் **பொருந்தாது**
எனக் கண்டுபிடித்துள்ளேன்!''

தோல்வி, ஏமாற்றம் ஒவ்வொன்றையும் ஏறுபடியாக்குங்கள்;
அதைத் தடைக்கல்லாய்ப் பார்க்கவேண்டாம்!

ஒருவேளை எதுவுமே சாதிக்கவில்லை என்று எண்ணுகிறீர்களா?

உங்களால் முடிந்ததைச் செய்து மீதியைக் கடவுள் கரங்களில் விடுங்கள் — உங்களுக்கு *''அமைதி''* கிட்டும் (பிர 4:6)

**இ) கடினமான உடன் பணியாளர்**

☐ ஒத்துழைக்காத உடன் ஊழியர்

(உ-ம்) யாக்கோபு + யோவான் — *''இடிமுழக்க மக்கள்''*

வரவிருக்கும் அரசிலும்
இவர்களோடுதான் பிறர் இயங்கவேண்டும்!

பொறாமைக்குக் குறைச்சலில்லை —
பிர 4:4 ... *எல்லா முயற்சி ... செயல் ... பொறாமை ...*
தானியேல் போல இதையெல்லாம் கவனியாதுவிடுங்கள்
(தானி 6:4)

☐ ஈவிரக்கமற்ற அதிகாரிகள்
1 பேது 2:18,19 ... *முரட்டுக் குணமுள்ளோர் ...*

☐ கீழ்ப்படியாத கீழ்நிலைப் பணியாளர்
எபே 6:7 ... *''அடிமையோ, உரிமைக் குடிமகனோ''*
நல்லதையே செய்துகொண்டிருங்கள்!
உடன் ஊழியரிடம் அன்னை தெரசா:
''எப்பொழுதும் சிரித்த முகத்துடனிருங்கள்!''
உடன் பணியாளருக்காய்த் தவறாது ஜெபியுங்கள்.

**ஈ) வேலைத் தலத்தில் அநியாயம்**
— குறிப்பாக, பதவியுயர்வுக்கடுத்தவற்றில்

பதவியுயர்வு கடவுளிடமிருந்தே எனப் புரிந்துகொள்ளுங்கள் —
சங் 75:6,7 ... *கிழக்கிலிருந்து ... மேற்கிலிருந்து ...* ***அல்ல***

உங்களுக்காய்க் கடவுள் நியமிக்காத இடத்திற்கு எவரும்
உங்களைத் தூக்கமுடியாது;
உங்களை அவர் வைத்திருக்கும் இடத்திலிருந்து எவரும்
உங்களை இறக்கவும் முடியாது!

பதவியுயர்வு (Promotion) என்பது உடனடிப் பயன் —
அது ''ஆசனத்தில்'' அமர்ந்திருப்பவரிடமிருந்து;
பலாபலன் (Rewards) என்பது முடிவான ஆசீர்வாதம் —
அது ''சிம்மாசனத்தில்'' வீற்றிருப்பவரிடமிருந்து!

வழக்கத்திற்கு மாறாக நமக்குப் பதவியுயர்வு கிடைத்துவிட்டால்
மகிழுகிறோமல்லவா?

அதைக் கடவுளின் ''தயவு'' என்கிறோமே —
மற்றவரோ, ''கடவுள் செய்தது சரியல்ல'' என்பரே!

## ■ முடிவுரை

☐ இப்பத்து அத்தியாயங்களின் தத்துவங்களை நீங்கள் பின்பற்றினால் —

வேலையானது சுமையாய் அல்ல, சுவையாய் இருக்கும்!

திங்கட்கிழமை வருகிறதே எனப் புலம்பமாட்டீர்கள்!
மாறாக, திங்கட்கிழமை வருகிறதென்று குதிப்பீர்கள்!

தினமும் பாடுங்கள்: *''இது கர்த்தர் உண்டாக்கிய நாள்''* (சங் 118:24)

This is the day; this is the day ...

*இன்றைய நாள், இன்றைய நாள்,*
*கர்த்தர் படைத்திட்டாரே, கர்த்தர் படைத்திட்டாரே;*
*மகிழ்ந்திடுவோம், நாம் மகிழ்ந்திடுவோம்*
*களிகூர்ந்திடுவோம், களிகூர்ந்திடுவோம்!*

☐ நமது ஓட்டத்தை முடிக்கும்போது,
விண்ணுலகு நமக்காய் விண்ணிசைக்கும் — வெளி 14:13

*''அவர்கள் தங்கள்* ***உழைப்பிலிருந்து*** *ஓய்வுபெறுவர்;*
*அவர்கள் செய்த* ***வேலைகள்*** *அவர்களைத் தொடரும்!''*